**I Additional District Court, Thoothukudi.**

**O.S.No.5/2023** **நாள் : 17.03.2026**

**வா.சா.1– திரு. பூலோகபாண்டியன்.**

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

சுப்பையா தேவரின் தகப்பனார் காளமுத்து தேவர் என்றால் சரிதான். காளமுத்து தேவருக்கு சுப்பையா தேவர் மற்றும் முத்தையா தேவர் ஆகியோர் மகன்கள் என்றால் சரிதான். அரியதேவரின் மகன் காசிராஜா 5 செண்ட் நிலத்தை தங்கவேல் நாடாருக்கு கிரையம் செய்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி 5 செண்ட்டில் தங்கவேல்நாடார் இரண்டு குடிசை வீடுகள் கட்டி வசித்து வந்தார் என்றால் சரிதான். தங்கவேல் நாடார் மெர்சி ஜெயபால் என்பவருக்கு 2004ல் கிரையம் செய்துவிட்டார் என்றால் சரியல்ல. புல எண் 130/1ல் 1.53 ஏக்கர் பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் புல எண் 130/1பி3 ல் 18.23 செண்ட் உள்ளது என்றும், அந்த சொத்து சுப்பையா தேவர், முத்தையா தேவர் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் தவறு. முத்தையாதேவர்மற்றும் கந்தையா தேவர் வகையறா 18.23 செண்ட்டை எட்வின் பர்னாந்திற்கு 1995ல் கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் தவறு. மேற்படி சொத்தை எட்வின் பர்னாந்து கிரையம் பெற்ற தேதியிலிருந்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எட்வின் பர்னாந்து மேற்படி சொத்தில் 18 செண்ட்டை மெர்சி ஜெயபாலுக்கு கிரையம் செய்துவிட்டார் என்றால் சரியல்ல. அதுமுதல் மேற்படி சொத்தை மெர்சி ஜெயபால்தான் அனுபவித்து வந்தார் என்றால் தவறு. மெர்சி ஜெயபால் வாங்கி அனுபவித்து வருவது வெள்ளையாத் தேவருக்கு தெரியும் என்றால் சரியல்ல. அந்த சொத்திற்கு மெர்சி ஜெயபால் பெயரில்தான் வருவாய்த்துறை ஆவணங்கள் உள்ளன என்றால் தவறு. 20.07.2022ல் மெர்சி ஜெயபால் அந்த சொத்தை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் தவறு. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்று

அந்த சொத்தை நத்தம் பட்டாவாக பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் தவறு. அந்த சொத்தை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து 2ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் தவறு. 2ம் பிரதிவாதி வருவாய்த்துறை ஆவணங்கள், மூல ஆவணங்கள் ஆகியவற்றை சரிபார்த்துதான் கிரையம் பெற்றார் என்றால் தவறு. 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. புல எண் 130/1பி3ல் அரசாங்க நில ஆர்ஜிதம் செய்தது என்றால் எனக்குத் தெரியாது. ஆர்ஜிதம் செய்தபோது எங்களுக்கு அறிவிப்பு வந்ததா என்றால் இல்லை. இழப்பீட்டு தொகை அரசாங்கத்தால் எங்களுக்கு வழங்கப்படவில்லை. பூலைய்யாத்தேவருக்கு ராமாத்தாள் மற்றும் வேலைய்யா தேவர் மட்டும் வாரிசுகள் அல்ல என்றும், மற்றவர்களும் வாரிசுகளாக இருக்கிறார்கள் என்றும் சொன்னால் சரிதான். பூலையய்யா தேவரின் வாரிசுகளை மறைத்து இறந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. வில்லங்கச் சான்றிதழ் எடுத்து பார்த்த பிறகுதான் வில்லங்கம் எனக்கு தெரியவந்தது. வேலைய்யாத் தேவருக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் தவறு. வேலைய்யாத் தேவர் பெயரில் தாவா சொத்திற்கான பட்டா இருந்ததில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்தை சுற்றி நான் கம்பி வேலி போட்டதாக சொல்வது தவறு என்றால் அதில் கம்பி வேலியே போடவில்லை. இந்த வழக்கு காலவரை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆகவே தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.03.17 19:11:37 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.